<u>குழித்துறை நகர்மன்றத்தின் 30-06-2023 வெள்ளிக்கிழமை காலை 11.00மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

<u>நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) வினோத் மருத்துவமனை அருகாமையிலிருந்து மதி கோழிக்கடை வரையிலும் செல்லும் கான்கிரீட் சாலை பழுதடைந்துள்ளது. அதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 537 - தீர்மானிக்கப்பட்டது.

<u>4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.C. லலிதா கொண்டு வரும் தீர்மானம்</u>

1) கோட்ட விளையிலிருந்து குந்நன்விளை செல்லும் பாதையில் போக்குவரத்திற்கு இடையூறாக நிற்கும் மின்கம்பம் 76, 77, 78, 79, 80 ஆகியவற்றை மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 538 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குந்நன்விளையில் திரு. விஜில் வீட்டின் முன்னாள் நிற்கும் மின்கம்பம் ரோட்டின் ஒரத்தில் மாற்றிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 538 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) கோலக்காட்டுவிளையில் திரு. ரவி என்பவர் வீட்டு பக்கம் நிற்கும் மின்கம்பத்தை ரோட்டின் ஒரத்தில் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 538 (3) தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சியில் பேருந்து நிலையம் செல்லும் கருங்கல் சாலையில் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.D12/82-ல் மீன்சந்தை மற்றும் தினசரி காய்கறி சந்தை 13380 ச.மீ. பரப்பளவில் செயல்பட்டு வருகின்றது. இதில் தினசரி காய்கறி சந்தை 8500 ச.மீ. பரப்பளவில் சுமார் 60 வருடங்களாகச் செயல்பட்டு வருகின்றது. அங்குள்ள கடைகள் அனைத்தும் 30 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டதாகும். தற்பொழுது தினசரி காய்கறி சந்தையில் 254 எண்ணிக்கை கடைகள் தனித்தனியே ஏலம் விடப்பட்டு நடைமுறையில் உள்ளது. காய்கறி சந்தையின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.1,80,53,911/- ஆகும். கடைகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து

காணப்படுவதால் அதனை முற்றிலும் அகற்றி விட்டு புதியதாகக் கடைகள் கட்ட வேண்டியது அவசியமாகும். எனவே சந்தையில் உள்ள 253 கடைகளையும் இடித்து விட்டு புதியதாக கடைகள், வாகன நிறுத்துமிடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளுடன் காய்கறிச் சந்தையை புதிப்பிப்பதற்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகை ரூ.14.90 கோடி ஆகும். இதற்கான கருத்துரு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்கும், நிதி ஒதுக்கீடு பெறுவதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.539 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு ரூ.38.00 இலட்சம் நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 06-06-2023-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

1) No Food Waste, Coimbatore
2) SKB Enterprices, Selam

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப ரீதியாக கூர்ந்தாய்வு செய்ததில் No Food Waste மட்டுமே தகுதி வாய்ந்ததாக உள்ளது. எனவே No Food Waste-ன் ஒப்பந்தப்புள்ளியினை 06-06-2023 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் கீழ்வருமாறு.

1) No Food Waste, Coimbatore மதிப்பீட்டை விட 1.18% குறைவு

வரப்பெற்ற ஒரு நபர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளியினை மதிப்பீட்டை விட 1.18% குறைவாக கொடுத்துள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஏற்று LOA வழங்கி கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.2% ரூ.76,000/- செலுத்திய பின் பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மேற்படி பணி அரசு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1967/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.540 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி எண்.110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் அரசு பள்ளிகளில் 1 முதல் 5 வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள 22-05-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. Brother's Kitchen என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு LOA வழங்கப்பட்டதில் மன்ற தீர்மானம் எண்.522, நாள் 30-05-2023-ல் மன்றம் அனுமதி அளித்துள்ளது. தற்போது ஒப்பந்ததாரர் மேற்படி பணி மேற்கொள்ள இயலாது என தெரிவித்து 30-05-2023-ல் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி பணி அரசு பணியாக இருப்பதாலும் 31-05-2023 அன்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 06-06-2023 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.:- ஒப்பந்ததாரர் Brother's Kitchen என்பவரின் மேற்படி பணிக்கு செலுத்திய ரூ.20000/-ம் வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் ஈடு செய்யவும் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1967/2023/**இ**1.

மன்றத்தீர்மான எண்.541 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி குத்தகை இனமாக 98-வது வாவுபலி பொருட்காட்சிக்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 21-06-2023-ல் கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | வைப்புத்தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர். மதிவாணன்,<br>அக்ரிடெக்<br>கிரீன் டெக்னாலஜிஸ்,<br>கன்சல்டன்சி சர்வீஸ்,<br>பத்தனாபுரம், கொல்லம் | 50,00,000 | 1,05,50,000 |
| 2 | திரு.எம். பால்ராஜ்,<br>த.பெ. மாணிக்கம்,<br>படப்புறை,<br>குழித்துறை, குமரி மாவட்டம் | 50,00,000 | 1,15,50,000 |

பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் சென்ற வருட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,21,00,000/- ஏலம் விடப்பட்டுள்ளது (நுழைவுக்கட்டணம் உட்பட) தற்சமயம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் நகராட்சி வசம் உள்ளது.

2016-2017-ம் ஆண்டில் நடைபெற்ற 91-வது வாவுபலி பொருட்காட்சியில் நுழைவுக் கட்டணம் வசூல் மூலம் நகராட்சிக்கு ரூ.21,77,345/- வரப்பெற்றுள்ளது.

2017-2018-ம் ஆண்டில் நடைபெற்ற 92-வது வாவுபலி பொருட்காட்சியில் நுழைவுக் கட்டணம் வசூல் மூலம் ரூ.16,27,715/- நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது.

2018-2019-ம் ஆண்டில் நடைபெற்ற 93-வது வாவுபலி பொருட்காட்சியில் நுழைவு கட்டணம் வசூல் மூலம் நகராட்சிக்கு ரூ.15,48,585/- வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் நுழைவுக் கட்டணம் மூன்று வருட சராசரி தொகை ரூ.17,84,548/- ஆகும்.

2019-2020-ல் 94-வது வாவுபலி பொருட்காட்சி ஒரே இனமாக குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

2020-2021 மற்றும் 2021-2022-ல் அதாவது 95 மற்றும் 96-வது வாவுபலி பொருட்காட்சி கோவிட் நோய் தொற்றால் நடைபெறவில்லை.

2022-2023-ல் 97-வது வாவுபலி பொருட்காட்சி ஒரே இனமாக குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மொத்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.1,21,00,000/-க்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. நகராட்சியால் நுழைவுக்கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ள 91, 92 மற்றும் 93-வது வாவுபலி பொருட்காட்சிகளின் சராசரி தொகை ரூ.67,84,548/- சென்ற வருட குத்தகை தொகையினை நீக்கம் செய்து வரப்பெற்றுள்ள மொத்த தொகை ரூ.1,03,15,452/-ல் 10% உயர்வு செய்யப்பட்டுள்ள அரசாங்க மதிப்பு தொகை ரூ.1,13,46,997/- ஆகும் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1290/2023/அ2.

மன்றத்தீர்மான எண்.542 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 31-05-2023-ல் கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

I. கருங்கல் சாலை கடை எண்.8

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | மாத வாடகை தொகை |
|---|---|---|---|
| 1 | C.S. சத்தியா,<br>கொல்லம்விளை,<br>உம்மளக்குன்று<br>கருங்கல் அஞ்சல் | 50000/- | 5500/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | G. ஜெரால்டு கிப்சன்,<br>ஈத்தவிளை, மேக்காமண்டபம் | 50000/- | 6500/- |

II. மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண்.A8

| | | | |
|---|---|---|---|
| 1 | K. கீதா,<br>மஞ்ஞான்விளை, மார்த்தாண்டம். | 50000/- | 4000/- |

III. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண். A6

| | | | |
|---|---|---|---|
| 1 | க. சேவியர் சேம்ராஜ்,<br>மார்த்தாண்டம் | 50000/- | 4100/- |

IV. மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடை எண்.1

| | | | |
|---|---|---|---|
| 1 | வி. தேவராஜன்,<br>த/பெ. வல்சலம்,<br>கொடுத்தறைவிளை,காப்புக்காடு | 50000/- | 10000/- |
| 2 | ற்றி. டெஸ்பினி,<br>க/பெ. தங்கப்பன்,<br>காப்புக்காடு | 50000/- | 9200/- |

V. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பழைய கடை எண்.7

| | | | |
|---|---|---|---|
| 1 | கிளேபாள்மேரி,<br>க/பெ.வைரவன்,<br>பாறப்பழஞ்சிவிளை,<br>சிதறால் | 50000/- | 4150/- |
| 2 | அ. ராஜன்,<br>5/98எ, துண்டத்துவிளை,<br>தேமானூர்,திருவட்டார் அஞ்சல் | 50000/- | 4550/- |

VI. மார்த்தாண்டம் மீன்சந்தை பின்புறம் நவீன கட்டண கழிவறை

| | | | |
|---|---|---|---|
| 1 | கே. கிறிஸ்துதாஸ்,<br>அமலறவிளைவீடு,<br>மீனச்சல் அஞ்சல் | 25000/- | 15000/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.I-ல் காணும் கருங்கல் சாலை கடை எண்.8 ரூ.11,000/-க்கு செயல்பட்டு வந்தது.

வரிசை எண்.II-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.A8, 2015-2016-ம் ஆண்டிலிருந்து பூட்டிய நிலையில் உள்ளது. ஒரே நபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

வரிசை எண்.III-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.A6, 2015-2016-ம் ஆண்டிலிருந்து பூட்டிய நிலையில் உள்ளது. ஒரே நபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

வரிசை எண்.IV-ல் காணும் கருங்கல் சாலை கடை எண்.1, ரூ.12075/-க்கு செயல்பட்டு வந்தது.

வரிசை எண்.V-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பழைய கடை எண்.7, ரூ.5500/-க்கு செயல்பட்டு வந்தது.

வரிசை எண்.VI-ல் காணும் மார்த்தாண்டம் நவீன கட்டண கழிவறை தற்சமயம் புதிதாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள இனமாகும்.
ந.க.எண்.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண்.543 (I) மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(II) மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(III) மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(IV) அனுமதிக்கப்பட்டது.
(V) மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(VI) மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சி கணனி வசூல் மையத்தில் வினியோகம் செய்யப்படும் பிறப்பு, இறப்பு சான்று கோரும் விண்ணப்பம், பிறப்பு சான்று பெயர் மாற்ற விண்ணப்பம், தொழில் உரிமம் கோரும் விண்ணப்ப படிவம் மற்றும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி விதிக்க கோரும் விண்ணப்பம், சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்ப படிவங்கள் ஒன்றிற்கு ரூ.2/- என்ற கட்டண விகிதத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் இப்படிவங்கள் அச்சிடுவதற்கு ஆகும் செலவினம் படிவத்திற்கு ஏற்ப ரூ.4 முதல் ரூ.10 வரை செலவிடப்படுகின்றது. எனவே கணனி வசூல் மையத்தில் விற்பனை செய்யப்படும் பிறப்பு இறப்பு படிவத்திற்கும், ஏனைய படிவங்கள் ரூ.10 என்ற கட்டண விகிதத்தில் விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.180/2007/டி2

மன்றத்தீர்மான எண்.544 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் பகுதியில் அமைந்துள்ள குப்பை கிடங்கின் உள் பகுதியில் புதியதாக நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் Shredder Machine Conveyor Belt புதியதாக ரூ.1,88,000/- இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு நகர்மன்றத் தலைவரின் 01-06-2023-ல் முன் அனுமதி பெற்று 23-06-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் இருஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவீகிதம் |
|---|---|---|
| 1 | Linga Agri Trading and Machinary Pvt. Ltd | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2 | Sree Saro Engineering Company, Coimbatore | 17.95% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளியில் Linga Agri Trading and Machinary Pvt. Ltd என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1461/2023/இ1

மன்றத்தீர்மான எண்.545 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 உண்டனாகுழி பகுதிக்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் அருகிலுள்ள கொடுங்குளத்தில் இருந்து மின்மோட்டார் பொருத்தி Sintex Tank அமைத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2,60,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண். 1677/2023/இ1

மன்றத்தீர்மான எண்.546 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையுள்ள வார்டுகளில் 1718 தெருவிளக்குகள் பராமரிப்பிற்கு தனியார் ஒப்பந்ததாரர் கங்கா எலக்டிரிக்கல்ஸ், திருநெல்வேலி மூலம் நகர்மன்றத் தீர்மானம் எண்.175, நாள் 30-06-2022-ன்படி 06-12-2022 முதல் 30-06-2023 வரை நீடிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையின்படி புதிய தெருவிளக்குகள் பொருத்தும் பணி முடிவடையும் வரை மீண்டும் 31-12-2023 வரை நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்ததாரர் மூலம் பழைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்திலே பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.1140/2021/இ1

மன்றத்தீர்மான எண்.547 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 98-வது வாவுபலி பொருட்காட்சியில் 02-08-2023 முதல் 22-08-2023 வரை 20 நாட்கள் நடைபெறுவதால் வி.எல்.சி. கலையரங்கத்தில், பொது மக்கள் வருகையினை முன்னிட்டு நுழைவாயில் தண்ணீர் வசதி, பொது கழிப்பிடம் பராமரித்தல், போர் போடுதல், மின்வசதி செய்தல், தபால் நிலைய சந்திப்பு உயர் கோபுர மின்விளக்கு முதல் Transformer வரை இன்டர்லாக் சாலை போடுதல் ஆகிய பணிகள் அவசர அவசியமாக செய்ய வேண்டியுள்ளதால் உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1659/2023/இ1

மன்றத்தீர்மான எண்.548 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-ல் காமனாட்டுவிளை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கிணறு ஒன்று உள்ளது. அந்த கிணறு பொது மக்களுக்கு பிரயோஜனமில்லாமல் இருப்பதால், பொதுமக்களின் நலன் கருதி மேற்படி கிணற்றினை தூர்வாரி சுத்தம் செய்திட ரூ.70,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1658/2023/இ1

மன்றத்தீர்மான எண்.549 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75L.0828-க்கு Battery பழுது ஏற்பட்டுள்ளதால் வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளது. எனவே வாகனத்திற்கு புதிய பேட்டறி வாங்கிட ரூ.8500/-க்கு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற தொகையில் புதிய பேட்டறி வாங்கி பொருத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1002/2012/இ1

மன்றத்தீர்மான எண்.550 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கூடுதலாக ஒரு ஸ்கார்ப்பியோ ஜீப்பு வாகனம் வாங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.17928/2022/MA1, நாள் 25-07-2022-ன் படி ரூ.16,82,000/- GEM Rate மதிப்பீட்டில் வாங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த வாகனம் இருப்பில் இல்லாத காரணத்தினால் Scorpio-ல் என்ற வாகனத்திற்கு GEM Portal விலைப்பட்டியல் வரப்பட்டது. அதன் விலை மதிப்பு ரூ.18,00,079/- ஆகும். ஆகவே கூடுதலாகும் தொகையான ரூ.1,18,079/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.113/2019/இ1

மன்றத்தீர்மான எண்.551 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சியில் 2016-2017-ம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சாலைப்பணிகள் தற்போது பழுதடைந்த காணப்படும் சாலைகளை சீர் செய்ய அரசு ஆணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 13-02-2023-ன்படியும் நகர் புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் NSMT 2023-2024-ல் 5-வது கூட்ட நடவடிக்கைகள் நாள் 29-05-2023-ன்படி ரூ.78.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.913/2023/இ1
மன்றத்தீர்மான எண்.552 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பாகோடு பகுதி R.S.No.307/2-ல், புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்க ரூ.151 இலட்சத்திற்கு அரசு ஆணை எண்.(4D) No.20 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (SSSFC) நாள் 08-06-2023-ன்படி Minites of Meeting Psmc 19th நாள் 29-05-2023-ன் படியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.911/2023/இ1

மன்றத்தீர்மான எண்.553 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் துவக்கி வைத்திட மாண்புமிகு நகராட்சி நிர்வாக துணை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களின் வருகையினை முன்னிட்டு பத்திரிகைகளில் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்ட பத்திரிகைகளுக்கு பில் பட்டியல் வரப்பெற்றது. தொகையினை வருவாய் நிதியில் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | பத்திரிகையின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினமலர் | 13860/- |
| 2 | தினத்தந்தி | 15375/- |
| 3 | Kal publication | 23904/- |

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்**.1379/2019/**இ**1.

மன்றத்தீர்மான எண்.554 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

98-வது வாவுபலி பொருட்காட்சி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பத்திரிகை மூலம் விளம்பரம் செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பத்திரிகையின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினத்தந்தி | 22365/- |
| 2 | தினகரன் | 15624/- |

மேற்கண்ட தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது
அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்
**ந.க.எண்**.1290/2023/**அ**2.

மன்றத்தீர்மான எண்.555 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் 15 KVA-1, 30 KVA-1 ஆக மொத்தம் 2 ஜெனறோட்டார்கள் மின்தடை ஏற்படும் போது பயன்பாட்டிற்காக உள்ளன. அவற்றில் பழுது ஏற்படும் போது பழுதுகளை சரிபார்க்கவும் அடிக்கடி ஜெனறோட்டார்களை Service செய்வதற்கும் வருடத்திற்கு உத்தேச செலவினம் ரூ.1,22,000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1678/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.556 அனுமதிக்கப்பட்டது.

.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.